2018 ஜனவரி 10]

பிரிவுகள் மற்றும் 7 முதுகலைப் பாடப் பிரிவுகள் தேவை என்று அரசுக்கு முன்மொழிவுகள் வரப்பெற்றிருக்கின்றன. வரக்கூடிய கல்வியாண்டிலே அதை ஆய்வு செய்து, அந்தப் பகுதி மாணவர்கள் அதிகமாக எந்தப் பாடப் பிரிவுகளை விரும்புகிறார்களோ, அந்தப் பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரி அங்கே இயங்குகிறது என்றும், அண்ணாவின் பெயர் எடுக்கப்பட்டுவிட்டது என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார். அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரி என்பது தனிப்பட்ட ஒன்று அல்ல. அண்ணா பல்கலைக்கழகத்தோடு ஒன்றாகச் சேர்ந்ததுதான் அந்த உறுப்புக் கல்லூரி. ஆகவே, அண்ணாவினுடைய பெயரானது எடுக்கப்படவில்லை. ஒன்றாக இணைத்து தரமான கல்வியை வழங்குகின்றபட்சத்திலேதான் இன்றைக்கு இந்திய அளவிலே 100 பல்கலைக்கழகங்கள் தேர்வு செய்யப்பட்டதிலே, நம்முடைய அண்ணா பல்கலைக்கழகமானது 6–வது இடத்திலே இருக்கிறது என்பதைப் பெருமையோடு இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலே, இந்தக் கல்வியாண்டிலே கூடுதலாக இரண்டு புதிய பாடப் பிரிவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வரக்கூடிய கல்வியாண்டிலே அந்தப் பகுதி மாணவர்கள் எந்தப் பாடப் பிரிவுகளை விரும்புகிறார்களோ, அவற்றை வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

15—

கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்

***22299—திரு. கே.பி.பி. சாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் தொகுதியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2018 ஜனவரி 10

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

எங்களையும், தமிழகத்தையும் வாழவைத்த தெய்வங்களான புரட்சித் தலைவர் அவர்களையும், புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன். தமிழகத்தை அமைதியுடனும், வளமுடனும், வளர்ச்சியுடனும் வழிநடத்துகிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

தமிழ்நாட்டில் மொத்தம் 129 கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. வெளி மாநிலங்களில் 66 கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஆக மொத்தம், 195 விற்பனை நிலையங்களுடன் கோ—ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது விற்பனையைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

திருவொற்றியூர் தொகுதியில் கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், திருவொற்றியூர் பகுதியில் விற்பனை நிலையம் அமைப்பதற்கு நியாயமான வாடகையில் கட்டடம் கிடைக்கப்பெற்றால் அப்பகுதியில் கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.

திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “ஒகி” புயலால் கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் தங்களது உயிர்களையும், உடைமைகளையும், உறவுகளையும் இழந்து பரிதவித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனது தொகுதியில் இருக்கக்கூடிய கொசஸ்தலை ஆற்றின் மூலமாக ஆயிரக்கணக்கான மீனவர்கள் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மணல் திட்டுக்களால் அந்த ஆற்றின் முகத்துவாரம் அடைபட்டுவிடுமோ என்கின்ற அச்சத்தில் மீனவர்கள் வாழ்கின்ற நிலையில்,

2018 ஜனவரி 10]

திருவொற்றியூர் தொகுதி மீனவர்கள், தொழிலாளர்கள் இன்றைக்கு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் அமைச்சராக இருந்தவர். கைத்தறித் துறை தொடர்பான மூலக் கேள்வியை கேட்டுவிட்டு, மீனவர்கள் சம்பந்தமாக துணைக் கேள்வி கேட்டு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களிடம் பதில் எதிர்பார்த்தால், அதில் என்ன நியாயம் இருக்கிறது? நீங்கள் கேட்ட மூலக் கேள்விக்குத் தொடர்பான துணைக் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. கே.பி.பி. சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, தொழிலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு அடித்தட்டு மக்கள் வாழக்கூடிய திருவொற்றியூர் தொகுதியில், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலமாக ஏற்கெனவே சிறந்த கடை ஒன்று திறக்கப்பட்டு, அந்தப் பகுதி மக்களுக்கு பயன்படுகின்றவகையில் மிக நல்ல முறையிலே அந்தக் கடை செயல்பட்டு வந்தது. இப்போது அந்தக் கடை மூடப்பட்டுள்ளது. ஆகவே, அந்தக் கோ–ஆப்டெக்ஸ் கடையை மீண்டும் திறந்தால் திருவொற்றியூர் தொகுதியில் இருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள் பயன்பெறுவார்கள்.*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, அந்தப் பகுதியில் இடம் இருக்கும்பட்சத்தில் விற்பனை நிலையம் அமைத்துத் தரப்படும் என்று சொன்னார்கள். திருவொற்றியூர் கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமாக ஏறத்தாழ 20 ஏக்கர் இடம் உள்ளது. அரசு நினைத்தால் அந்த இடத்திலேகூட கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் ஒன்றைத் திறந்து வைக்கலாம். திருவொற்றியூர் தொகுதி மக்களுக்கு பயன்படுகின்றவகையில் அந்த இடத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் ஒன்றை அமைத்துத்தர முன்வருவாரா என தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான இடம்*

[2018 ஜனவரி 10

இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார். கூட்டுறவுத் துறை சம்பந்தப்பட்ட அந்த இடத்தைத் தருவதாக General Body Meeting–ல் முடிவு செய்து, அவர்கள் அந்த இடத்தை எங்களுக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்பட்சத்தில் அந்த இடத்திலே கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் மீண்டும் அமைப்பதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.

திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான அந்த இடம் தற்போது அரசின் பராமரிப்பு இல்லாமல், சமூக விரோத செயல்கள் நடைபெறும் இடமாக இருக்கின்றது. மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரோடு கலந்துபேசி, அந்த இடத்தைப் பாதுகாக்கின்ற வகையிலும், மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலும் உடனடியாக அந்த இடத்தில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் ஒன்றை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சாமி அவர்கள் அமைச்சராக இருந்திருக்கிறார், இப்பொழுது சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். எனவே, General Body meeting போட்டு அந்தக் கூட்டத்திலே அனுமதி அளிக்கப்படுகிறபட்சத்தில் கோ—ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைப்பது குறித்து உடனடியாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஆருயிர் அண்ணன் தளபதி அவர்களுக்கும் என்

2018 ஜனவரி 10]

வணக்கம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட சென்னை தொகுதி முழுமைக்கும் சேர்த்து எழும்பூரில் மட்டுமே கோ–ஆப்டெக்ஸினுடைய விற்பனை நிலையம் ஒன்று உள்ளது. எனவே, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் ஒன்று வருமேயானால், அங்கு வசிக்கின்ற மிகவும் பின்தங்கிய மக்களுக்கு அது உதவியாக இருக்கும். இங்கே, இதற்கு முன்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் இடம் இல்லாத நிலை ஒன்று இருக்குமேயானால், திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதியிலே சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான பல கட்டடங்கள் பயன்பாட்டில் இல்லாமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலே மாநகராட்சிக்குச் சொந்தமாக பயன்படுத்தப்படாமல் இருக்கின்ற அந்தக் கட்டடங்களை அடையாளம் காட்டுவதற்கு நான் தயாராக இருக்கிறேன். எனவே, திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதி மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு அங்கே கோ–ஆப்டெக்ஸினுடைய விற்பனை நிலையம் ஒன்றை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறபடி, கள ஆய்வு மேற்கொண்டு விற்பனைக்கு உகந்த சூழ்நிலை இருக்குமாயின் உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.